ஞானபாநு.

VOL 3 } தொகுதி 3. } October 1915. ராக்ஷஸஹு ஐப்பசிமீ { No 7. { பகுதி 7.

உண்மையையே உரை.

அரிச்சந்திர மகாராஜனுடைய சரித்திரம், நளச்சக்கரவர்த்தியினுடைய சரித்திரம் முதலியவற்றை ஹிந்துக்களில் அநேகமாக எல்லோரும் அறிவார்கள்; நளமகாராஜன் தமயந்தியை விவாகம் செய்ததற்குமுந்தி ஓர் அன்னபட்சியை அவளிடத்துக்குத் தூது அனுப்பினான். அவ்வன்னமானது தமயந்தியினிடத்தில் வந்து அவளுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கையுண்டாகும் பொருட்டுத்தனது இயற்கைக் குணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது,

"பொய்ம்மைமொழி புகன்றறியேம் புகலமன மெண்ணுகினு
மெய்ம்மையல துரையாநா வேதநவில் பயிற்சியாற்
கொம்மைவரு முலைவாய்மை யுடையோரைக் குறித்துரைப்பி
னெம்மைமுத லெடுத்துரைப்ப ரீர்ங்கமலத் திறைமுன்னும்."

என்று வெகு கம்பீரத்துடன் பெருமைபேசிற்று. இப்பாட்டின் கருத்து "பொய்வார்த்தைகள் புகன்று அறியோம்; பொய் சொல்வதற்கு ஒருவேளை மனமானது நினைக்காலும் எங்களுடைய நாவானது உண்மையல்லாத தொன்றை உரையாது; ஏனென்றால், சத்தியவஸ்துவைப் பற்றியுள்ள சத்தியத்தையே பிரதிபாதித்துக்கொண்டிருக்கின்ற வேதத்தினிடத்தில் தான் இந்த நாக்குக்குப்பழக்கம். சாட்சாத் பிரமதேவனுக்கு முன்னிலையிற்கூட உண்மையுரைப்பவர்கள் எவரென்று விசாரித்தால் எம்மையே எல்லாரும் கூறுவார்கள்" என்பதாம். அன்னப்பட்சியானது, தான்மாத்திரமன்று, தனது இனமே பொய்சொல்லியறியாது என்று கம்பீரமாக வெகு கர்வத்துடன் கூறிற்று. பொய்கூறவேண்டுமென்ற நினைப்பு மனத்தில் எழவே எழாது; அப்படியே தப்பித்தவறியொருக்கால் உதித்துமாயின், நாவானதொருபொழுதும் பொய்கூறுதற்கு இசையாது. அக்காலத்தில் எங்கு பார்த்தாலும் வேதசாஸ்திரப் பயிற்சியே சர்வசாதாரணமாயிருக்

தது. இது நளச்சக்கரவர்த்தியினுடைய காலம், சரித்திர ஆராய்ச்சிக் கெட்டாதகாலம்; தவிர, அன்னப்பட்சியாவது, பேசுவதாவது? கவியினுடைய மனோபாவனையேயன்றி, உண்மையாக நடந்தவிஷயமன்று, என்றுதற்கால நாகரிகவித்தியார்த்திகள் கூறிப்பரிகசிக்கலாம். இவர்களுடைய கூற்றை உண்மையாகக் கொண்டபோதிலும், மேலே கூறப்பட்டுள்ள பாட்டில் எத்தகைய சிறந்தகருத்துக்கள் அடங்கியிருக்கின்றன? எக்காலத்திலாவது வழக்கபழக்கங்களாயல்லாதவை மனிதருடைய மனத்தில் ஒரு பொழுதும் உதிக்கா; சாதாரணமாக மனிதன், அதிலும் விசேஷமாகக் கவியானவன், எப்பொழுதும் உலகத்தை உற்றுப்பார்த்துத்தனது நினைப்புக்களை ஏற்படுத்திக்கொள்கிறான். ஞானேந்திரியங்களால் நுகரப்படாத வஸ்துவைப் பற்றியாவது விஷயத்தைப்பற்றியாவது மனிதனால் ஒருபொழுதும் நினைக்கமுடியாது. அன்னப்பட்சிபேசியிருந்தாலும் சரியே, அது பேசினது பொய்யாயிருந்தாலும் சரியே, அக்காலத்தில், அதாவது, நைடதம் எழுதப்பட்ட காலத்தில் ஜனங்கள் பொய்யை மனத்தினால்கூட ஸ்மரித்ததில்லையென்று தெரிகிறது.

* * *

பொய்பேசுவது புல்லியர்களின் செய்கையென்பது நிச்சயம். நமது தேசத்தில் பொய்பேசுவதென்றால் இன்னதென்றறியாது ஜனங்கள் இருந்தார்கள் என்று மகம்மதியர்களுடைய படையெடுப்புக்கு வெகுகாலத்திற்கு முன்னமேயே இங்கு யாத்திரையாகவந்த பாஹியன், ஹயூன்ஸங் என்ற சீனர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். பொய்யென்பது ஒருவன் தான் தெரிந்தோ, தெரியாமலோ செய்தகுற்றத்தைக் குற்றமென்று உணர்ந்தபின் அக்குற்றத்தினால் ஏற்படும் அவமானத்திற்காவது தண்டனைக்காவது பயந்து அதைமறைக்கும் பொருட்டு நடவாததொன்றைக் கற்பனைசெய்து விடுதலாம். இங்ஙனம் ஒரு பொய்சொல்ல ஆரம்பித்துவிட்டால், பின்னர் அந்தப்பொய்யை மறைப்பதற்கு இருபது பொய்சொல்லவேண்டி நேரிடுகிறது. இந்த இருபது பொய்யையும் மறைப்பதற்கு இருநூறு பொய் சொல்லவேண்டும். இங்ஙனமே மனிதன் பொய்ச்சொரூபமாய் விடுகிறான். அறிந்து செய்த குற்றத்தின் பயனை அநுபவித்துத் தான் தீரவேண்டும். ஒருவேளை இப்பொழுது தப்பித்துக்கொண்டாலும் எப்பொழுதாவது அநுபவிக்கத்தான் வேண்டும். இது சிருஷ்டி நீதி.

* * *

உண்மையையே உரைப்போர் உயர்ந்தோர் என்பதில் சந்தேகம் என்ன? "இனி நமக்குளதென நினைக்கும் கதியிழக்கினுங்கட்டுரையிழக்கிலேம்" என்று உறுதிமொழி கூறிக்கொண்டு உண்மையிலேயே நின்ற அரிச்சந்திரமகாராஜாவின் பெயரானது நீடூழிகாலம் நிலைத்து நிற்கின்றதல்லவா? தமது உடைமைகளாகிய பூமி, மனைவி, மக்கள் முதலியவற்றையெல்லாம் இழந்து தன்னையும் அடிமைப்படுத்தித் தாழ்த்திக்கொண்ட அரிச்சந்திர மகாராஜன் அகங்கார, மமகாரங்களை யெல்லாம் அடியுடனழித்துக்கொண்டு ஆத்மவஸ்துவாகிய சத்திய ஸ்வரூபமாகி என்றென்றும் விளங்குகிறார்.

* * *

இன்னும் நமது இதிகாசங்களுள் ஒன்றாகிய மகாபாரதத்தை யெடுப்போமானால் நமது முன்னோர்களுடைய சத்திய விரதத்தின் பெருமையை வெளிப்படுத்தற்கு ஆங்குள்ள ஒரு சிறிய திருஷ்டாந்தமே சாலும். பாரதயுத்தம் ஆரம்பிப்பதற்கு சுபதினம் பார்ப்பதற்காக துர்யோதனன் சகல சாஸ்திரசம்பன்னனாகிய சகாதேவனிடத்திற்குவந்து தர்மராஜனுடைய தலையறுந்து விழுவதற்கு அனுகுணமாக "நல்லநாள்" பார்த்துச் சொல்ல வேண்டுமென்றுகேட்க, பொய்யாமொழிப் புண்ணியனாகிய சகாதேவன் சிறிதும் யோசனை செய்யாமல், தனது தமயனாகிய தர்மபுத்திரருடைய தலையறுந்து விழும்படியாக நல்ல நாள் பார்க்கச் சொல்கிறானே யென்ற நினைப்புக்கூட இல்லாமல் ஜோதிஷசாஸ்திரத்தின்படி ஒருநாளைக் குறிப்பிட்டு உண்மையை உரைத்துத் துரியோதனனை அனுப்பினான். உண்மையை உரைப்பதினால் தன்னவருக்காவது தனக்காவது ஆபத்து நேரிட்டாலும், அதனால் பெரியோர் உண்மையினின்றும் பின்வாங்கார்.

* * *

ஆனால் உண்மையினின்றும் தீமைபிறப்பதில்லை, துக்கம் உண்டாகாது; துன்பம் ஏற்படாது. உள்ளக்கிளர்ச்சியே உண்மையின் லட்சணம், இன்பானுபவமே உண்மையின் தன்மை. பிறருக்கு, அதுவும் சாதுக்களுக்குத் துன்பத்தையும் துக்கத்தையும் விளைவிக்கும்படியான உண்மை—அதாவது, வாஸ்தவமாக நடந்திருந்தாலும்—உண்மையாகாது. உதாரணமாக, ஒரு மூர்க்கன் ஒருபசுவையடித்துத் துரத்திக் கொண்டுவர, அந்தப்பசுவானது

பயந்து அலறிக்கொண்டு நாம் இருக்கும் இடம் நோக்கி ஓடி வந்து ஒரு சந்துக்குள் நுழைந்து தப்பித்துக்கொள்ள, அந்த மூர்க்கன் "இப்பக்கமாக ஓடிவந்த பசுவெங்கே?" யென்று நம்மைக்கேட்டால் நாம் என்னபதில் சொல்வது?. நாம் உண்மையை உரைத்தாலோ, அந்த மூர்க்கன் அந்தப்பசுவைப் பின்தொடர்ந்து சென்று அதை இன்னும் அடித்துக் கொல்வான். ஆதலால் பசுசென்றவழியை நாம் அறிவோமாயினும், இங்கு கண்ணாற் கண்டதையுரைத்தல் உண்மையாகாது.

தெய்வநீதி.*

ஓர் துறவியின் சரித்ரம்.

("ஸ்வதேச நண்பர்" எழுதியது.)

ஜனங்களின் கண்ணிற்படாமல், ஏகாந்தமாய் ஓர் காட்டில் கவலையின்றி ஒரு ஸந்யாஸி வஸித்து வந்தார். அவர் படுக்கும் இடம் ஓர் குகை; அவரது ஆகாரம் பழவர்க்கங்கள்; அவரது பானம் நிர்மலமான ஜலம். பகவந்நாமத்தை பஜிப்பதே அவரது வேலை; கடவுளைப் புகழ்வதே அவருக்குப் பரமாநந்தம்.

இங்ஙனம் அவர் அதிக பரிசுத்தமாகத் தமது வாழ்நாளைக் கழித்து வருங்கால், அவர் மனதில் ஓர் ஸம்சயம் உதித்தது.—உலகத்தில் தர்மவான்கள் துன்புறுவதும், அஸத்யவான்கள் இன்பத்தை யநுபவிப்பதும் கடவுள் நீதியல்லவே, அப்படியிருக்க அக்கிரமங்களைக் கடவுள் கண்டும் வாளாவிருப்பது யாது காரணத்தாலோ?—என்று யோசனை செய்துகொண்டே, உலக நடவடிக்கைகளைத் தாமே கண்ணால் கண்டு தெளியவேண்டும் என்று தீர்மானித்து அம்மஹான் ஆரண்யத்தைக் கடந்து வெளியே சென்று கொண்டிருந்தார்.

அவர் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்பொழுது, நல்லாடை உடுத்த அழகிய வாலிபன் ஒருவன் அவருக்கு வழித்

* இக்கதை ஆங்கில மஹாகவிகளில் ஒருவராகிய தாமஸ் பார்னல் (Thomas Parnall) என்பவர் எழுதிய "துறவி" (Hermit) என்ற செய்யுள் கதையின் தமிழ் அமைப்பு அந்தக் கவி வாழ்ந்தகாலம். கி. பி. 1679—1718.—

"ஸ்வதேச நண்பன்."

துணைவனானான். சிறிது நேரம் நேர்ந்த ஸம்பாஷணையில் அவர்களிருவரும் அத்யந்த ஸ்நேஹிதர்களாகி விட்டனர்:

ஆதித்யன் அலைகடலில் மூழ்கினான். எங்கும் இருட்டு ஆள ஆரம்பித்தது. இரவை எவ்விடத்தில் கழிப்பதோ என்று துறவியும் வாலிபனும் ஏக்கங்கொண்டிருக்கும்பொழுது, வழியில் ஓர் அழகிய மாளிகையைக் கண்டனர். அம்மாளிகையின் வேலைக்காரர்கள் இவ்விருவர்களையும் மிக்க அன்புடன் வரவேற்றனர். அன்றிரவு, அவர்கள் அறுவகை உண்டி அருந்தினர். பரிமாறப்பட்ட பாத்ரங்கள் யாவும் பொன்னால் செய்யப்பட்டவை. மறுநாள் காலையும் அவர்களிருவரும் சாப்பிட்டுவிட்டுத் தமது பிரயாணத்தை ஆரம்பித்தனா. அவர்கள் புறப்படுவதற்கு முன் ஓர் அதிசயமான ஸம்பவம் நடந்தது. அதாவது, அத்துறவியுடன் வந்திருந்த வாலிபன் பரிமாறப்பட்ட பொன்பாத்ரங்களிலொன்றை யாருக்கும் தெரியாமல் திருடிக்கொண்டான்.

இருவரும் தம்வழியே போய்க்கொண்டிருக்கும்பொழுது, வாலிபன் தான் திருடிய பொன்கோப்பையை ஸந்யாஸிக்குக் காட்டினான். உடனே அவ்வாலிபன்மீது கோபமும், ஸந்தேஹமும் கொண்டார் துறவி; ஆனால் முற்றிலும் கவனிப்போம் என்று மௌனம் ஸாதித்தார்.

ஸூர்யன் அஸ்தமனமாயினன். எங்கும் இருள் மூடிக் கொண்டது. இடி இடிக்கலாயிற்று. பெருமழையும் பெய்ய ஆரம்பித்து விட்டது. பிரயாணிகளிருவரும் வெகுதூரம் நடந்து கடைசியில் ஓர் வீட்டை அடைந்தனர். பலமுறை கதவைத் தட்டினபின் ஒருவன் முறுமுறுத்துக்கொண்டே கதவைத் திறந்து இவர்களை உள்ளே வரவழைத்தான். வீட்டுக்காரனோ எச்சிற் கையினாலும் காக்கையை ஓட்ட மனந்துணியாத ஓர்கனலோபி. வந்திருக்கும் அதிதிகளோ மழைபால் நனைந்து, பசியால் வருந்தும் ஏழைகள். எனினும், அந்த லோபி அன்பின்றி உபயோகமற்ற உணவைக் கொடுத்து மழை நின்றவுடன் போய்வரும்படிக் கடூரமாய்ச் சொல்லி விட்டான். துறவியுடனிருந்த வாலிபன், பிரபு வீட்டிலிருந்து திருடிவந்த பொன்கோப்பையை இந்த "பிசினார்"க்கு இனாமாக வழங்கினான். இதைக் கண்டதும் அந்த ஸந்யாஸி" இவன் என்ன பெரும் பைத்யக்காரனாயிருக்கின்றான்" என்று எண்ணினார்.

"நான் பொற்கோப்பையைத் திருடினேனல்லவா? அதன் சொந்தக்காரன் ஓர் டாம்பீகன்; ஜம்பக்காரன். பொற்பாத்திரங்களி லும் வெள்ளிக்கோப்பைகளிலும் பரிமாறினுல்தான மஹேஸ்வர பூஜை செய்தவனுவான்? அன்று அவனுடைய பொற்கிண்ணம் திருட்டுப்போய்விடவே, அவன் இனிமேல் தன்னிடம் வரும் அதிதிகளுக்கு ஜம்பமின்றி வணக்கத்துடன் அன்னமளிப்பதாகத் தீர்மானித்துள்ளான்.

"லோபியிடம் பொற்கோப்பையைக் கொடுத்ததற்குக் காரணம், அவன் அதுவரை ஒருவருக்கும் அன்னமளியாதவன், அன்று மாத்ரம் உபயோகமற்ற உணவு கொடுத்தற்கு விலையேறப் பெற்ற பொற்கிண்ணம் கிடைத்ததைக் கண்டு மிகவும் ஸந்தோஷித்து இனி தன்னிடம் வரும் எல்லா அன்பர்களையும் ஆதரிக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துக்கொண்டான்.

"நம்மை நன்ருக ஆதரித்த பிரபுவின் குழந்தையைக் கொன்றதற்குக் காரணம் இதுவாகும்; அப்பிரபுவுக்கு அந்தக் குழந்தை பிறப்பதற்குமுன், அவன் தேவபக்தியில் சிறந்து எண்ணிறந்த புண்ணிய கருமங்களைச் செய்துவந்தான். பிள்ளை பிறந்தவுடன் கடவுளிடத்திருந்த பக்தி குறைபலாயிற்று. ஆகவே பிதாவை ரக்ஷிக்கும்பொருட்டு மகனைக்கொன்றேன்.

"நமக்கு வழிகாட்ட வந்த ஸேவகனை ஆற்றில் தள்ளி உயிரிழக்கச் செய்ததற்கும் காரணம் உண்டு. அந்த நன்றியற்ற வேலைக்காரன், பிள்ளை பிறந்த துபரத்தில் மூழ்கிக் கிடக்கும் அப்பிரபுவைக் கொலை செய்துவிட்டு அவனது ஆஸ்திகளை யெல்லாம் தான் கைப்பற்றிக்கொள்ளலாம் என்று தீர்மானித்திருந்தான். ஆகவே அவனைக் கொன்றேன்" என்று சொல்லி அந்த மஹா புருஷன் அந்தர்த்தானமாய் விட்டனன்.

இதனை மிகவும் கவனமாய்க் கேட்டுவந்த அத்துறவிக்குக் கடவுளின் மஹத்வம் இத்தன்மைத்து என்பது தென்பட்டது. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று திடம் செய்து கொண்டு முன்போலவே அவர் ஆரண்யம் சென்று பரிசுத்தமாகக் காலங் கழிக்கலானூர்.

நன்மொழிகள்.

1. நீ எப்படி நல்ல புஸ்தகத்தைப் படிக்கப் பொறுக்கி எடுக்கிறாயோ, அப்படியே உன் ஸம்பாஷணைக்கும் நல்ல ஸஹவாஸமுள்ள ஸ்நேஹிதர்களைக் கண்டுபிடி. நல்ல புஸ்தகங்களும், ஸத்ஸங்கமும் உன்னை நல்வழிப்படுத்தும்.

2. நீயே ஒரு கார்யத்தைச் செய்தால் அது பூரண திருப்தியாய் நிறைவேறும்; உன்பிள்ளை செய்தால் ஏறக்குறைய ஸுமாராயிருக்கும்; உன் வேலைக்காரன் செய்தால் அது கெடுதியாகவே முடியும்.

3. நமது கடமையை ஸரிவரச் செய்வதைவிட மேலானது நமது வாழ்க்கையில் வேறொன்றுமில்லை சகல புத்தியும் மனச்சாக்ஷியின் பலஹீன்மையுமே ஒருவன் செய்யவேண்டிய கடமையைச் செய்யவொட்டாமல் தடுக்கின்றன. கடமையைச் செய்பவனே அறிவாளி.

"ஸ்வதேச நண்பன்"

விக்ரஹா ராதனச் சிறப்பு

(ப்ரஹ்மஸ்ரீ ஆர் - எஸ் - கங்கா ஜடேச சர்மா அவர்களெழுதியது.)

"அரிதரிது மானிட ராதலரிது" என்ற ஔவை மொழிப்படி அரிய மானிடப் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும், பேரின்ப (வீடு அல்லது மோக்ஷ) மடைவதையே நோக்கமாகக் கொண்டு அதே கண்ணுங்-கருத்து மாயிருந்து, முபல வேண்டியது முதன்மையான கடமை என்பதை யறியாதாரியார்?

பேரின்ப மடைவதற்கான வழிகள் பலவற்றுள்ளும், மிகவும் இலகுவாயிருப்பதனல், மிகமேலானதென்று—நம்மால்மட்டுமன்று, பெரியோர்களாலும் கருதப்பட்டுள்ளது மானது "விக்ரஹா ராதனம்" ஒன்றே!

இதற்கின்றியமையாதது "பேரன்பு," அதாவது "பக்தி" ஒன்றே!

கடவுளிடத்துச் செலுத்தும் இம்மேலான அன்பை யுடையவர்கள், விக்ரஹா ராதனத்தின் பெருமையை யறியாதிருக்க விய

லாது. அதன் சிறப்பை அவர்கள்தான் உள்ளபடியறிந்து மகிழ்பவர்கள். (வழிபடுபவரது நிலைமைக் கியன்றவாறு, பலநன்மைகளையளிக்குமென்று சென்ற 2-ம் தொகுதி 89-ம் பக்கத்தில் 'கடவுள் வழிபாடு' என்றவ்யாஸத்திற் குறிப்பிட்டிருந்ததை நண்பர்கள் அறிந்திருக்கக் கூடும்.)

இதன் வழிகளை இன்னும் சிறிது நன்கு ஆராய்வோம். எல்லாம்வல்ல இறைவன் நம்மைப்படைத்த பொழுதே, 'மெய், வாய், கண், காது, மூக்கு' என்னும் ஐம்பொறிகளுடனும், படைத்துள்ளார். இவைகள் ஒவ்வொன்றும் ஓரிமை (க்ஷண)ப் பொழுதேனுஞ் சும்மா யிருக்கு மியற்கை வாய்ந்தன வல்ல

இவையனைத்தும்:—மெய், உணர்ச்சியாலும்; வாய், மொழியினாலும்; கண், பார்வையினாலும்; காது, கேள்வியினாலும்; மூக்கு, முகர்தலினாலும்; இவ்விதமாக—வெளிப்பட்டுக் கொண்டு ஐம்பொறி களால் ஐம்புலன்களை நுகர்ந்துகொண்டு வருகின்றோம்.

இவை எவ்வாறிருக்கிற தெனின், ஓர் மலையின்மீது மழை பெய்தால் அத்தண்ணீர் பெருக்கெடுத்துப் பலவாறாக மூலைக்கு மூலை பெருகி ஓடுவதுபோலப் புலன்களைந்தும், ஒவ்வொன்று மொவ்வொரு விஷயங்களைப் பின்பற்றி ஓடிக் கொண்டிருக் கின்றன. முதலிற் செய்த செய்கையினியல்பைப் பின்பற்றியே, ஐம்பொறிகளும் புதிது புதிதான செய்கை யென்னும் வலையில் நம்மைச்சிக்க வைக்கின்றன.

நமது அறிவும், உளமும் எதனைக் கருதுகின்றதோ, அது மொழிகளாலும், செய்கைகளாலும் வெளிப்பட்டு விடுகின்றது. அதாவது நமது உட்கருத்தைப் பின்பற்றியே வெளிச்செய்கை நிகழ்கின்றது.

ஆதலாற் புறச்செயல்கட்கெல்லாம் உளமே பிறப்பிடமன்றோ?

உளத்தில் ஒரு எண்ணம் வேரூன்றி விட்டதானால், தூக்கத்திற்கூட அவ்வெண்ணத்திற்கேற்ற செய்கைகள் வெளிப்படுவதைக் காணலாம்.

சில குழந்தைகள் தூங்கும்பொழுது வேறு குழந்தைகளுடன் விளையாடுவதாகக் கனவுகண்டு சிரிப்பதும், அழுவதும், பள்

ளிக்கூடத்திற் படிக்குஞ் சிறுவர்கள் தூக்கத்தில் உபாத்யாயர் பாடங்கேட்டதாகக் கனவு கண்டு, பாடம் ஒப்புவிப்பதும், பயப் படுவதும், பெரியவர்களிற் சிலர் தூங்கும்பொழுது ஒருவர் தம் மையடித்ததாகக் கனவுகண்டு தாமும் அவரையடிக்கவும் உதைக் கவும், செய்து அவ்வடிதரையில் விழுவதும், விழித்துக் கொண்டு, தாம் கண்டதும், தாம்பிறரால் அடிபட்டதும், தாம் பிறரையடித் ததும் கனவாயிருந்தாலும், தாம் பிறரையடித்ததாக நினைத்துக் கொண்டு அடித்த அடியால் தமது கைபுங்காலும் தரையில் அடி பட்டுநோகின்றனவென்பதையும், சிலர்பயங்கரமான கனவு கண்டு பிதற்றுவதையும், வேறுசிலர் உத்யோகஸம்பந்தமான கனவுகண்டு அதிகாரஞ் செய்வதையும், மற்றுஞ்சிலர் பாட்டுப்பாடுவதையும் நாம் கண்டும் கேட்டும் வருகின்றோமன்றோ?

இதேவழியில் அடியார் (பக்தர்) களும், கடவுளிடத்துப் பேரன்பு செலுத்துவதற்கேற்ப அவர்களது எல்லாப் பொறி களும், புலன்களும், செய்கைகளும், கடவுளைநோக்கியே செல் வதைக்காணலாம்.

ஓரிமைப் பொழுதேனுஞ் சும்மாயிராது நாவினுற் பிறர் மீது வீணானகுற்றங்குறைகளையும் அபாண்டமான பிழைகளையும் ஆரோபித்துச் சொல்லித் தூற்றிப் புலம்பிக் கொண்டு திரியும் மனிதர்கள் பலரையும் நாம் காண்கின்றோம்.

இவ்வாறு பிறரைப்பற்றித் தீச்சொற்களை மொழிவதையே தொழிலாகக் கொண்ட ஒருவரது நாவை நாம் திடீரென அடக்கி விட முயன்றால், அது நம்மாலியலாதது மன்றி, அவருக்கும் அது பொறுத்தற்கரிய தண்டனையாய்த் தோன்றும். அன்றியும், அவரது நாவானது சும்மாயிருந்து அறியாததனால் அந்த ஒரு பொறியின் செய்கை மற்ற நான்கு பொறிகளினாலும், பலவாறான செய்கைகளால், வெளிப்பட்டுக் கொண்டேயிருக்குமென்பதிலும், அதனாற்றீமை யின்னும் அதிகரிக்குமென்பதிலும் ஒரு சிறிது மையமில்லை.

அதுபோல் நமது ஒவ்வொரு பொறிகளும், முற்பிறப்பின் இயல்புக் கேற்றவாறு, இப்பிறவியிலும், எப்பொழுதுந் தியவற் றையே நாடிச் சென்றுகொண்டிருக்கும். அவற்றைத் திடீரென்று திருப்புதல் எவராலும் மியலாது. அப்படிச்செய்தல் சிலபொழுது அளவற்ற துன்பத்தையும் அளிக்கும்.

நன்மனத்தை மனதார முகர்தலும் இவ்விதமவனிடத்து நாட்டம் வைத்தலே விக்ரஹாராதனத்தின் மெய்யான உட்கருத்து.

ஒருவனது உள்ளத்தில், தனது அன்பிற்கு உறைவிடமாகிய இறைவனிடத்து மாசற்றபேரன்பு தோன்றுமானால் அவனது எல்லாச்செய்கைகளும், தனக்கென்ப தொன்றின்றி, அனைத்தும் உலகோபகாரமாகவே மாறி அருண்மாரி பொழியும். அப்பொழுது அணையின் மேலிட்டால் இயற்றும் விக்ரஹாராதனமானது உலகத்திற்கு அளவற்ற நன்மையையே, பளிக்குமென்பதற்கு யாதுதடை ?

எல்லாம் வல்ல இறைவனை விக்ரஹரூபமாய் ஆராதிப்பது இன்றியமையாதது, என்பதை உறுதிப்படுத்துவதற்கும், இதனிடத்து நமது முன்னோர்கள், எவ்வளவு அன்பு வைத்திருந்தார்கள். என்பதையறிவதற்கும்,—உலகத்தில் இறைவனுக்கென்று ஏராளமான பெரிய பெரிய கோயிற்களும், ஆராதனங்கள் முறையே நிறைவேறுவதற்கான மிகுந்த வருமானமுடைய நிலபலன்களும், ஏராளமான செல்வங்களும், ஏற்படுத்தப் பட்டிருப்பதன்றி, மூலைக்கு மூலை யிருக்கும் பலரும், ஒன்று கூடி இறைவனது பெருமையைக்கண்டு களிப்பதற்கான தேர், திருவிழாக்கள் முதலியவைகளுமே—மிகுந்த உதவியாயிருக்கின்றன.

ஒரு நாட்டை ஆளும் அரசனையோ, அல்லது மேலான ஒரு உத்யோகஸ்தனையோ, நாம் வரவேற்பதானால், எவ்வளவு மனமகிழ்ச்சியுடனும், அனைவருங் கூடி என்னென்ன கார்யங்கள் செய்கின்றோம்? எவ்வுலகங்களையும், படைத்துக் காத்து அருள் மழைபொழிகின்ற இறைவனை, எவ்வாறு போற்றினால் தான் போதும்? நம்மனைவர்க்கும் ஒரே தாயுந் தந்தையுமான இறைவனை எவ்வாறுதான் வழிபட இயலும்? எவ்வளவுகாலம் போற்றினாலும், புகழ்ந்தாலும், வணங்கினாலும் தகும்.

வ்யஷ்ட்யாத்மாக்களாகிய நாம் அனைவரும், ஸமஷ்ட்யாத்மாவாகிற அந்த "நித்ய, சுத்த, புத்த, முக்த, ஸத்சிதாநந்த, பரமசாந்த" ஸ்வரூபனாகிய, இறைவனோடு இரண்டறக் கலக்க (ஸாயுஜ்யம் அடைய) வேண்டுமென்று விரும்புகிறோமென்றும், விருப்பத்திற்கறிகுறியான பேரன்பு நம்மிடத்திற் சிறிதுகலக்கமெய்தியிருப்பதை மாசற்றுத் தெளிவடையச் செய்து தூயதாக்கிக் கொண்டு இறைவனோடு ஒன்றுசேர விரும்புகிறோமென்றும்—அறி

வில்கள் உலகத்தில் மயக்கப்பொருள்களாகிய மண், பெண், பொன் முதலியவற்றை யடைவதில் எவ்வளவுபற்றும் விருப்பமும், வைத்திருக்கிறார்களோ, அவற்றைப் பெறுவதில் எவ்வாறு பலவழிகளிற் கவலையெடுத்துக் கொண்டு முயன்று, எவ்விதத் துன்பத்தையும், பாராட்டாது, தொழிற்படுகின்றார்களோ, அவ்வாறுள்ள— பற்றும், செய்கையும், அறிஞர்களாயுள்ள இறைவனடியவர்கட்கும் இறைவனிடத்து உண்டென்பதை நிலைநாட்டுவதற்காகவே நமக்கும், இறைவன் பொருட்டான வழிபாடுகள் இன்றியமையாதனவா யிருக்கின்றனவென்று நம்முன்னோர்களால், வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

இவைகளே ஈச்வரபூஜை, பகவதார்ச்சனம், விக்ரஹாராதனம், கடவுள் வழிபாடு, சிலை வணக்கம், முதலிய பெயர்களால் வழங்கப்படுகின்றன. (தொடரும்)

தமிழின் தற்கால நிலை.

1. சென்ற ஆடிமாதப் பத்திரிகை 102-ம் பக்கத்தில், "ஐந்து ரூபாய் இனம்" என்னும் தலைப்பின்கீழ் உள்ள விஷயத்தைக் காண மிகவும் சந்தோஷமும் வியப்புமுண்டாகின்றன. சந்தோஷம், இம்மாதிரியான சாதனங்களால் தூண்டப்பட்டாயினும் தனித்தமிழ் சிறந்தோங்குமென்ற நம்பிக்கையால்; வியப்போவெனின், இத்தகைய 'வீரதமிழ்பாஷாபிமானிகள்' இன்னும் இருக்கிறார்களாவென்று இதுவரை எனக்குள்ள சந்தேகத்தால்! அன்னவர் இதற்காக என்னை மன்னிப்பாராக.

2. ஆனால், என், நம்மவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர்களுக்கு, 'தனித்தமிழ்' என்பதைப்பற்றிய எண்ணந்தான் எங்ஙனம் தோன்றும்! காலத்தின் போக்கையும் சந்தர்ப்பங்களையும் அனுசரித்துத் தமிழின் நிலை இம்மட்டுக்கு வந்துவிட்டது! அந்தோ! செந்தமிழிலேயே பயின்று புலமைபெற்ற சில பண்டிதர்கூட, தாம் சிறு பிள்ளைகளுக்கு முதலாய் வாசகப்புத்தகங்கள் செய்புங்கால், தமிழிலேயே மதுரமான மொழிகளும் தொடர்களுமிருக்க, "கனி யிருப்பக்காய் கவர்ந்தவாறு," சமஸ்க்ருதம் முதலிய பிறபாஷைச் சொற்களையே ஏராளமாய் உபயோகித்திருக்கின்றனர். அதில் சுவையறியமாட்டாத

நந்தமிழ்க்குழந்தைகள், "கறிச்சுவையறியமாட்டாத சட்டுவம்" போல் எவ்வளவு மேலானகருத்துடையதாயினும் விஷயத்தை யுணராதுபோவது மாத்திரமேயன்றி, அவைகளில் 'க்ரஹிக்கிறது', 'ஸ்நேஹிக்கலாம்', 'ஹ்ருதயம்', 'ப்ரத்யக்ஷம்' முதலான அளவிறந்த சொற்களை உள்ளபடியே வாசிக்கமாட்டாமல் தமிழ்ப் படிப்பிலேயே வெறுப்படைவது என் அனுபவம்.

3. இவ்விதிவ்வாறாக, நமது நாட்டில் நடிக்கும் பாஷைகளுக்கு நிச்சயமாய் அளவு கிடையாதென்றே சொல்லலாம்; ஒரு நாடகக் கூட்டத்தார் தத்தமக்குள் பலபல வேடம் பூணவும், சிற்சிலவிடத்து ஒருவரே பற்பலவிதமாய் இரண்டு மூன்று நாயகராக நடிக்கவும், அன்னவர்கள் தம்மைப்போன்ற பிறரிடமிருந்து பலவற்றை வருவித்துத் தம்முடையதை விட்டுக் கழித்துத் தள்ளவும், இப்படியே முழுதும் எல்லா விஷயங்களிலும் தங்களை மாற்றிக்கொண்டே வருவதுபோலத் தமிழுலகம் தன் நாடகத்தில் மாறி மாறி நடிக்கின்றது. இப்படி செய்யும் அதன் காரியமானது, தூய்மையுள்ள பளிங்கு, தன்னையடுத்த பலவர்ணங்களாலும், அவை பொருந்தியுள்ள வஸ்துக்களாலும், தன்னொளியையும் பரிசுத்தத்தையும் கெடுத்துக்கொள்வது போலிருக்கிறது. தமிழ்மாது அழகே சொரூபமுடையாளாயிருக்க, அழகுக்கு அழகு செய்யுமாபோல் அவளைத் திருத்தவல்லார் யாரே?

4. ஆதியிலிருந்தே, பூர்வீக ஆரியர்களுடைய சகவாசத்துக்கு வந்தது முதலே, தமிழுக்கு சம்ஸ்க்ருதம் முதல் சத்துருவாயிற்று. அது 'வேதபாஷை' 'தெய்வபாஷை' என்று பூஜிக்கப்பட்டதால், தமிழர்களால் ஆவலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிறகு, "நவாபு தர்பாரில்," இராஜபக்திக்காகவும், பயதுக்காகவும் இந்துஸ்தானியும் தடையிலாது ஏற்றுவழங்கப்பட்டது. தற்காலம் இராஜாங்கபாஷையாகிய ஆங்கிலமோ, ஏக சக்ராதிபத்யம் பூண்டு மற்ற எல்லாபாஷைகளையும் ஆளுங்கால், அததன் சொந்தக்காரரைக் கப்பம் செலுத்திக் கைகட்டி தூர நின்று மரியாதை செய்ய ஏவி, எங்கும் செல்லுகிறது. இவ்விதம் மீறியுள்ள அந்நிய சத்துருக்களால் தாக்கப்பட்டும் போதாமல், உட்கலகக்காரர்களாகிய தெலுங்கு, கன்னடம் முதலியவைகளால் பாதிக்கப்பட்டும் குல ஸ்திரீயான தமிழ்மாது பொறுமையோடு அடங்கி நிற்கிறாள். ஆனால் இந்த பொறுமை, துராகிருதமாய்

நுழைந்த சத்துருக்களுக்கு இடமேயன்றி அனுபவ பாத்யத்தையும் கொடுத்து தான் ஏமாந்து நிற்கவும் இடம் உண்டாக்குகிறது! அந்தோ! காலத்தின் போக்கும் குணத்துக்குச் சம்மானமும் என்னே!

5. இப்போது யோசிக்கின், தமிழ்ப்பயிற்சியில் ஆரம்ப முதலே பிறபாஷைச் சொற்களும் வித்தியாசமின்றி வருவதாலும், வழங்கும்போதும் அந்தந்த பாஷைகளைப் பேசுவோரிடத்து சகவாசம் செய்வதாலும், குழந்தைப்பருவ முதலே சுயத்தமிழின்றி கலப்பான தமிழே உறுதிப்பட்டு, நம்மில் ஏறக்குறைய எல்லோராலும் வழங்கப்பட ஓர் நியாய மிருக்கக்காண வரும்.

6. ஆனால், என்னைப்பற்றியே சொல்கிறேன். என் நாட்டுப் பாஷையும் வீட்டுப்பாஷையும் தமிழ்; பெற்றதும் பாலூட்டி வளர்த்ததும் தமிழ்; எல்லாம் தமிழ்! ஆயினும் என்ன? பாஷாபிமானத்தைச் சொல்லின் அவமானத்துக்கென்ன குறை? ஸம்ஸ்க்ருதம் தெரியாது, ஆங்கிலமோ சொற்பந்தான் தெரியும், எனினும், வழங்கும்போது பத்துக்கு சம்ஸ்க்ருதம் 3, இங்கிலீஷ் 2, துலுக்கு 1, மற்றவை 1, எனப் பகிர்ந்ததுபோக மீதி மூன்றும் தமிழே! எனக்கு அப்படித்தான் வழக்கம்! என் சகோதரரோ?

7. இன்னொன்று யாவர்க்குந் தெரிந்த ரகசியம். கண்டிஷன், கேட், கேஸ், இவைகளைப்போன்றவைக்கு இங்கிலீஷ் என்ன என்று கேட்போரும், மனசு, மாசம், சக்ரவர்த்தி முதலியவற்றிற்குச் சம்ஸ்க்ருதம் கேட்போரும் இலரோ? அன்றியும், 'பரவாயில்லை' யென்பதில் 'பரவா' என்பதற்கும்: பேஷ், ஜோர் இம்மாதிரி சொற்களுக்குமுரிமையானவர் ஓர்புறத்தில சும்மாவிருக்க, தெலுங்கு, தமிழ், கன்னடம் முதலியன வழங்குவோர் அவை தமது தமது எனவாதிடுவோரின் பாஷாபிமானத்தின் அளவு என்னே! இந்நிலையிலுள்ள நம்மை எதற்கு ஒப்பிடலாம்? அந்தோ! கோடிக்கணக்கான பிள்ளைகளைப்பெற்ற தமிழ்மாது தன் பிள்ளைகளால் தானறியப்படாமற் போனதன்றி, பிறசொற்களைப் பார்த்துத் தன் பெயரால் அழைக்கும் மதியற்ற குழந்தைகளைப்பெற்ற, காலத்தின் விபரீதம் என்னே! இக்கொடுமையை மாந்தர்சகிப்பரோ?

8. அறியாமை கிடக்கட்டும், அதனால் கெடுவதும் கொஞ்சம், பாதிப்பும் கொஞ்சம்; முடியாமையென்பது முயற்சியின் கதவை மூடி அதிகம் பாதிக்கிறது; ஆனால் நன்மையைக் கைப்பிடியாமை பாதிப்பது மாத்திரமன்றி பாழுக்கே இழுக்கிறது: வீம்பின் மதிக்கேடு என்னே! சுயநடை, உடை, பாஷைகளை, அந்நியமானவைகளின் மேல் மினுக்கால் மயங்கிக் கைவிட்டுக் கீழே தாழ்த்துமுன், அத்தகையோர், இரண்டையும் சீர்தூக்கிப்பாராமல், "குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது" போல், தாமே தாழ்ந்துபோக ஏதுவான பிறவற்றை ஆராய்ந்துப்வார்களாக! தமிழுலகம் இம்மாதிரி மயக்கத்திலிருந்து தெளிந்தோங்க "காலத்தாற் செய்த உதவி"யாக நமது வீரபாஷாபிமானி செய்யும் உபாயத்தின் கருத்து வெற்றி பெற்று முற்றுப் பெறுமாக. இந்த பேருபகாரத்தை யேற்று, அதைப்பெற்ற பயனைத் தாமே உண்பதே தமிழ் மக்கள் அன்னவர்க்குக் காட்டும் நன்றியறிதலாம். தமிழின் சிறப்பே அந்நன்றியின் பெருக்கென்பது துணிபு.

9. எனவே, பணத்துக்கோ, கீர்த்திக்கோ, பாஷாபிமானத்துக்கோ, எதற்கோ, நான் இதுவரை உபயோகித்த கலப்புத் தமிழின்றி, நமது வீரத்தமிழ்ப் பாஷாபிமானி கேட்டபடி, ஓர் "தனித்தமிழ்" வியாசம் எல்லா தமிழ்மக்களும் எழுத முயலுவார்களாக. இதைக் கடமையென்று கொண்டவர் முயலாதிரார். "முயற்சி திருவினையாக்கும்." அப்படி ஒருக்கால் அம்முயற்சியில் தவறினும் வீண்போகாது; கடமைமீறின குற்றமும் வாராது. இதைக்கொண்டு எல்லோரும் முன்னெழ முயலத் தமிழ்மாது கருணை புரிவாளாக.

எல். எஸ். சுப்பாராய அய்யர்.

தமிழில் எழுத்துக்குறை.

ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்விகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்காவிட்டால் தமிழ் நேரே பேசமுடியாமலும், எழுதமுடியாமலும் போய்விடுமென்று அவர்களுக்கு அச்சமுண்டாயிற்று.

தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாதவண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற்காட்டிய எழுத்துக்களையும் சேர்த்தார்கள்.

நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவிருத்தி செய்துகொள்வதற்கு, கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலாமென்று சில பெரியோர் கருதுகிறார்கள். ஆனால் அதைக்காட்டிலும் அடையாளங்கள் போடுவது சுலபமான வழி.

இப்போதுள்ள அரிச்சுவடியிலே பழகிய தமிழருக்கு மேற்படி அடையாளங்களால் எவ்வித ஸங்கடமும் நேரிடாது. தப்பாகவோ, சரியாகவோ வழக்கம் போல வாசித்துக்கொண்டு போவதை அடையாளங்கள் தடுக்கமாட்டா. கிரந்த எழுத்துக்களைக் கொண்டு சேர்த்தால் பாதி படிக்கும்போதே நிறுத்திவிட நேரிடும்.

ப்ரெஞ்ச், இங்கிலீஷ் முதலிய ஐரோப்பிய பாஷைகளிலும், ஹிந்தி முதலிய நமது நாட்டு பாஷைகளிலும்,—உயிருள்ள பாஷைகளிலே வளர்வன வெல்லாவற்றிலும்—உச்சரிப்புத்திருத்தத்தைக் கருதிப்பழைய எழுத்துக்களில் சில அடையாளங்கள் சேர்த்து ஸௌகர்யப்படுத்திக் கொள்கிறார்கள். இதனால் எழுத்தின் வடிவத்தில் யாருக்கும் சந்தேகம் நேரிடாது. இந்த எளிய வழியை அனுசரித்து நமது தமிழ்மொழி விசாலமடையவேண்டுமென்பதே என்னுடைய விருப்பம்.

சி. சுப்பிரமணிய பாரதி.

ஸ்வாமி விவேகாநந்தரின் கடிதம்.

[ஸ்ரீமான் ராமச்சந்திர சாஸ்திரிகள் மொழிபெயர்த்தது.]

ஸ்விட்ஜர்லாண்ட் 6-8-1896.

* * * பயப்படாதே. என் குழந்தையே, பெருங்காரியங்கள் செய்யப்படப் போகின்றன. தைர்யமாயிரு. * * *

அவர் (மாக்ஸ்முல்லர்) எனக்குமிகநேர்த்தியான கடிதங்களெழுதுகின்றார்; ராமகிருஷ்ணருடைய சரித்திரத்தைப்பற்றி

ஒரு பெரியபுத்தகம் எழுதுவதற்கு விஷயங்கள் வேண்டுமென்று கூறுகின்றார். * *

இந்தப்பத்திரிகா ஜம்பம்போதும், போதும், எப்படியாயினும், எனக்குப்போதுமென்றாய்விட்டது. நாம் நமது வழியிலேயே செல்வோமாக; மூடர்கள் பேசட்டும். ஒன்றும் உண்மையை எதிர்க்கமுடியாது. நீ இப்பொழுது அறிகிறபடி, நான் ஸ்விட்ஜர்லாண்டில் இருக்கிறேன்; எப்பொழுதும் சலித்துக்கொண்டேயிருக்கிறேன். எழுதுவதோ, அல்லது அதிகமாகப் படிப்பதோ என்னால் ஒன்றும் செய்யமுடியாது, நான் ஒன்றும் செய்யவும் கூடாது. அடுத்த மாதத்திலிருந்து எனக்காக ஒரு பெரிய லண்டன் வேலை காத்துக்கொண்டிருக்கிறது. மாரிகாலத்தில் நான் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்கின்றேன்; அங்கேயுள்ள கார்யங்களைச் சீர்செய்ய முயற்சி புரிவேன்.

நான் எல்லோரிடத்தும் அன்பு செலுத்துகிறேன். தீர ஹிருதயங்களே, வேலைசெய்யுங்கள், தவறுதீர்கள், முடியாதென்று சொல்லாதீர்கள்; வேலைசெய்யுங்கள்,—வேலையின்பின் ஈஸ்வரன் இருக்கிறார். உங்களுடன் மகாசக்தி யிருக்கின்றாள்.

உங்களை ஆசீர்வதித்து அன்புசெலுத்துகின்ற விவேகாநந்தர்.

சபாஸ்தாபனங்கள்.

இந்நிலவுலகின்கண் இப்புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் நாம்மானிட ஜென்மத்தை எடுத்துவிட்டோம். ஆனால் இந்த ஜென்மத்தை வீணாக்காமல் உலகில் நல்வழியில் நமது அறிவை விளங்கவைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அப்படிக் கடமைப்பட்டு இஹபரசுகத்தைக் கருதினால் நாம் கவனிக்கவேண்டிய முக்யமான சிலவிஷயங்கள் உண்டு.

(1) அதாவது ஆத்மவித்தையைக் கைக்கொள்ளுதல், அதையநுசரித்த தெய்வபக்தியை அடைதல், ஈச்வரனுடைய ஸாமீப்யத்தை அடையத்தக்க வழியைத்தேடுதல், இவற்றையடைய விவேகத்தை விளங்கச்செய்ய சர்வசாஸ்திரங்களையும் ஆராய்ந்து கல்விகளில் தேர்ச்சியடைதல், ஈகை, குணம் கருணை, சாந்தம் தேசாபிமானம் முதலிய நல்ல குணங்களை விர்த்திசெய்தல், சரீர

ஆரோக்கியம், அதற்கு ஸாதகமான பொருள் ஸம்பாதித்தல், சம்பாத்தியத்திற்குரிய தொழில்களைக் கற்றல் அதற்கு ஆதாரவாக ஆசாரங்களைச் சீர்திருத்தல், ஜனங்களுக்குள் நிகழும் துவேஷத்தைவிலக்கி ஐக்யபாவத்தை அதிகரித்தல், சுகத்துக்கும் சாஸ்திரத்துக்கும் வருத்தமில்லாத வழிகளைத்தேடுதல் முதலியன வாகும்.

(2) மேற்கூறிய வழிகளும் அவைகள் கூறப்பட்டிருக்கும் வரிசைக்கிரமத்தை அநுஸரித்தே ஒன்றுக்கு மற்றொன்று கீழ்த்தரமானது என்றதாரதம்மியத்துடன் மேன்மையடைந்திருக்கின்றன. இவைகள் சரித்திர ஆராய்ச்சியால் நன்கு விளங்கும். இக்காலத்தில் நம்மிந்துக்கள் இத்தகைய நல்வழியில் பிரவர்த்தித்து நியாயத்திற்கும் ஒழுங்குக்கும் புறம்பல்லாத இஹபர மேன்மையடைய ஒற்றுமைகொண்டு முன்வரத்தாமதப் படுகிறார்கள்; ஏனெனில் நம் நாட்டில் ஆண்களும் பெண்களும் கல்வியில் தேர்ச்சியடையவேண்டியது அவசியமென்று தெரியாது அநாவிசியமென்று நினைத்து கல்வியடையாது கவனத்தைக் கைதவற விட்டுவிட்டார்கள்.

(3) இதுகாரணம்பற்றியே நம்மிந்துக்களில் அநேகர் உலக ஒற்றுமையும் ஸதாசாரசீலமும் உதாரகுணமும் அறியாது உயர்ந்தமதம் தாழ்ந்தமதம் என்று தங்கள் வாய்மதத்தை வெளியிட்டு பொறுமையென்னும் சொல்லைத்திருப்பி வாசித்து பொறுமைப் படுவோர்க்கு அந்தச்சொல்லே பதிலுரைப்பதை அறியாது, பொறுமைப்பட்டும் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கவேண்டுமென்ற தீவிர புத்தியைக்கொண்டு, ஏழைகளைமோசம் முதலியன செய்யவும் உடன்பட்டுவிடுகிறார்கள் இவர்களுக்குக் கடவுள் க்ஷேமத்தைக்கொடுக்கமாட்டார். தவிர பரலோகத்திலும் இவர்களுக்கு நல்லகதிகிடைக்காது என்பது நம்முடைய பிராசீனக் கொள்கையாகும்.

(4) நாம் கெட்டவழியில் பிரவேசித்தால் நமக்குக் கிடைக்கும அவமதிப்புக்கு அளவில்லை. ஆகையால் அத்தகைய துராசாரத்தைத்துலைத்து கல்விப்பொருளை அடைய முயற்சித்து தேசத்தோடொத்துவாழ்தலாகிய அம்முறையில் சென்றாலொழிய நாமும் க்ஷேமாபிவிர்த்தியடைய வேறுவழியில்லை. ஆதியில் நமது

பட்டினத்தடிகளும் "சாதியிற் கூட்டுவரோ சமயத்தோரெண்ணுவரோ பேதித்து வாழ்வதெல்லாம் பேச்சுக்கிடமாச்சுதடி" என்று கூறியுள்ளார். இதுகொண்டே நாமும் தாழ்ந்தவருயர்ந்தவரென்ற பேதாபேதங்களை நீக்குவது நமது நாடுவிருத்தியடைய முதற் கடமையாகும்.

(5) நாம் மேற்கூறியவழியில் இறங்க முன்வருவோமானால் நமது கல்வியை விர்த்தியடையச் செய்வதுடன் நம் பெண்களுக்கும் நமக்குரிய சுதந்தரங்களுண்டு என்பதைக்கவனித்து நம் பெண்களையும் உயர்தரக்கல்வியடையச் செய்யவேண்டும். நமக்கு கல்வி இன்றியமையாததென்பதற்கு அனேக புராணகவிதைகள் மிதமிஞ்சிக்கிடக்கின்றன, அஃது அவசியமில்லை. ஒன்றைச்சான்றாக எடுத்துக் கொள்வோம். அதே நம்சகோதரர்கள் நம்பத் தகுந்ததென எண்ணுகிறேன்.

(6) இந்துக்கள் கல்விப்பயிற்சியும் நாகரீகமும் குறைந்து ஹிந்துமத அப்யாசம் நம்மாணவர்களுக்கு ஏற்படாதபடியால் அவர்கள் நாஸ்திக நெறியைச்சார்ந்தும் அதனுடைய தோஷங்களைக் கைக்கொள்ளக் கூடியவர்களாயும் இருக்கிறார்களென்பதை அறிந்து பாரதமாதாவுக்கு அருமையான புத்திரராக அவதரித்துக் காலஞ்சென்ற நமது ஸ்ரீமத் கோபால கிருஷ்ண கோகலே நமது இந்தியாவுக்கு செய்த நன்மைகளை ஆயிரம் நாவைப்படைத்த ஆதிஷேசனும் சொல்வதரிதென்றால் அடியனுற் சொல்லி முடிவதன்று. ஆகையால் அம்மகாஹநுபாவர் நம் இந்தியாவுக்கு எடுத்துக்கொண்ட முக்யகொள்கை கட்டாயப் படிப்புச்சட்டத்தை நம்மையாளும் பிரிட்டிஷாரிடமிருந்து வாங்க வேண்டுமென்பதல்லவா?

(7) அவர் செலுத்திய இந்திய ஊழியத்தில் இக்கல்வியல்லவா முதன்மைபெறவேண்டியிருக்கிறது. இதையே நாம்கல்விக்கு ஓர் சான்றாக எடுத்துக்கொள்வோம். இதைப்பற்றி இறங்குவதே அவரது முயற்சி கைகூடுவதாகும். அஃதே அவர் தம்வாழ்வைக் கடந்துசென்றதால் இந்தியாவுககு ஏற்பட்ட பெரிய நஷ்டத்தை லாபப்படுததிக்கொள்வதாகும். அப்புண்ணியவான்முயற்சிபலிக்குமாறு நமது சகோதரர்களும் சகோதரிகளும் கல்வியில் அபிவிர்த்தியடையவேண்டிய வழியைத் தேடவேண்டுமல்லவா?

அதற்கு நம்நாட்டார் மனமுவந்து சிலவசதிகள் ஏற்படுத்த வேண்டும். அதாவது ஒவ்வோரிடங்களிலும் சபைகள் ஸ்தாபித்து அதில் அனேகர் பொருளுதவியால் அரிய சாஸ்திரங்களைச் சேகரித்துவைத்து அதன்வாயிலாக ஏழைகளையும் கல்வியடையச் செய்துயாவரும் இத்தேசத்தின்கண் பொதுநன்மைக்கு உழைத்து மேன்மை தாழ்மையின்றி துராசாரங்களைச் சீர்திருத்தி தற்காலநாகரிகம் தேசாபிமானம் வியவசாயம் வியாபாரம் கைத்தொழில் முதலியன விர்த்தியடையச்செய்யும் நமது ஞானபானு, மித்திரன், நேசன் முதலிய சிறந்தபத்திரிகைகளை வாசிப்பதில் கவனமுற்றுவருவதே நம்நாட்டிற்கு நாம் செய்யும் நற்கடமையாகும்.

(8) இதுகாரணம்பற்றியே சீரும் செல்வமும் சிறப்புற்றோங்கிப் பேருங்கீர்த்தியும் பிரபலித்திலங்கும் கொங்கிற் சிறந்து ஸ்ரீமத் பாலசுப்ரமண்ய தேவர் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திவ்யக்ஷேத்திரமாகிய சிவன்மாமலையில் கல்வி பரவாக்குறையை நிவர்த்திக்க காங்கயம் அஷ்டாவதானம் ஸ்ரீமான் சேஷாசலநாயுடு அவர்களும் திருப்பூரில் தேசாபிமானியாய் விளங்கி நைத்தொழில் இயந்திரம்வைத்து ஏழைகள் விர்த்திக்கு மனமுவந்து பாடுபட்டுவருபவரும் எனது நண்பருமான ஸ்ரீமான் வைத்தியநிபுணர் வரதராஜலு நாயுடு அவர்களும் எனக்குத்துணையாகஆதரிப்பதாக உறுதிகூறியவண்ணம்சிவன்மலையில் இந்து சபா ஒன்று (14-7-15ல்) ஸ்தாபிக்கப்பட்டு அதன் விசேஷமுயற்சியால் (2-8-15ல்) தர்மபெண்பாடசாலை ஸ்தாபித்தும் பெருமைபொருந்திய ஞானபானு,மித்திரன்,நேசன் முதலிய சிலபத்திரிகைகளும் வரவழைத்து யாவரும் பார்த்தும் நம் சிறுவர்களும் சிறுமிகளும் கல்வியடைந்தும் கைத்தொழில் முதலியவற்றில் நம்நேயர்கள விர்த்தியடைய இச்சபையானது யாவருக்கும் ஊக்கம்கொடுத்து சபைமிக்க அபிவிர்த்தியடைந்து வருகின்றது.

(9) ஆகையால் இம்மாதிரிசபைகள் இல்லாதவிடங்களில் சபைகள் ஏற்படுத்தி அதன் வருமானத்தில் பத்திரிகைகளை வரவழைத்து வாசித்து அதன்வாயிலாக தேசாபிமானம் நாகரிகம் கைத்தொழில் முதலிய நல்லொழுக்கங்களில் பிரவர்த்தியைக் கையாண்டுவர முன்வருவீர்களென வணங்கிவேண்டித் துணிந்து நம்புகிறேன்.

கே. எஸ். சுப்ரமண்யம், சிவன்மலை.

சேலம்ஜில்லா, தர்மபுரிக்கடுத்த அன்னசாகரம் என்னும் கிராமத்தில் உள்ள செங்குந்த ஜாதியாரெல்லாரும் ஒன்றுசேர்ந்து செங்குந்தர்சபையென்று ஒருசபை ஏற்படுத்தி, அந்நிய நாடுகளினின்றும் இதுவரைவந்து கொண்டிருந்த சாயச்சரக்குகள் இப்பொழுது மிதமிஞ்சி விலையேறிப்போயிருக்கின்றமையினால் அச்சரக்குகளைத் தாங்களே தயார்செய்துகொள்கின்றதென்று தீர்மானித்து ஒருதொழிற்சாலை ஏற்படுத்துவதற்காகப் பெரும் முயற்சிசெய்துவருகின்றனர். இவ்விஷயத்தில் இடைவிடா ஊக்கம் கொண்டு உழைத்து வருபவரும் மேற்படி செங்குந்தர்சபைக்குக்காரியதர்சியாய் நியமிக்கப்பட்டிருப்பவருமாகிய ஸ்வதேச வைத்தியர் ஸ்ரீமான் டி. என். தீர்த்தகிரிமுதலியாரவர்களுடைய முயற்சி வியக்கற்பாலது.

* * *

சேலம் ஜில்லா, பாலக்கோட்டுக்கடுத்த பாப்பாரப்பட்டி என்னும் கிராமத்தில் உள்ள ஜனங்கள் ஸதாநந்த ஸபை என்று ஒரு சபையை ஸ்தாபித்து பிரதிவாரமும் ஓரிடத்திற் கூடி நல்விஷயங்களைக்குறித்து சம்பாஷிப்பதாகத் தீர்மானித்திருப்பதுமன்றியில், ஒருவாசகசாலையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வூரிலும் செங்குந்த ஜாதியாரே மிகுதியாயிருப்பதால், அன்னசாகரத்தில் போல ஒருதொழிற்சாலையை ஸ்தாபிக்க முன்வருவார்களென்று நம்பப்படுகிறது. இச்சபையின் உப அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் மு. சின்னமுத்து முதலியாரவர்கள் இச்சபையைவிருத்திக்குக் கொண்டுவர, வேண்டிய முயற்களைச் செய்து வருகின்றார்கள்

இனாம் ஐந்து ரூபாய்.

நாம் செய்திருந்த விளம்பரப்படி "தமிழை"ப்பற்றி நான்கு கட்டுரைகளும் "திருவள்ளுவ"ரைப்பற்றி இரண்டு கட்டுரைகளும் நமக்கு வந்தன. அவற்றில் வடமொழியில்லாத கட்டுரை ஒன்றேனுமில்லை. ஆதலால் அவற்றை எழுதியனுப்பிய நண்பர்களில் எவருக்கும் நாம் குறித்த பரிசிலை அளிக்க முடியாமற் போனதைப்பற்றி நாம் மிகவும் வருந்துகின்றோம். நண்பர்கள் எழுதியனுப்பிய கட்டுரைகளிலுள்ள வடமொழிகளுக்குக்கீழ்

கோடிட்டுள்ளோம். அவற்றை அவர்கள் வேண்டுவார்களாயின் அனுப்பக் காத்துக்கொண்டிருக்கின்றோம்.

நம் தமிழ்மக்கள் தனித்தமிழ் எழுதப்பழக வேண்டுமென விரும்பியும் தனித்தமிழில் கட்டுரைகள் எழுதுவதன் அருமையைக் கருதியும் அடுத்த மார்கழிக்குள் "தமிழைப்"பற்றியாவது "திருவள்ளுவ"ரைப் பற்றியாவது தனித்தமிழில் எட்டுப்புறங்களுக்குக் குறையாத கட்டுரை எழுதி நமக்கு அனுப்புவோர்க்கு முந்தி நாம் கூறிய பரிசிலோடு இன்னும் வெண்காசு ஐந்து சேர்த்து மொத்தம் வெண்காசு பத்து அளிப்பதாக முடிவு செய்துள்ளோம். இது முன் கட்டுரை எழுதியனுப்பிய நண்பர்களும் இன்னமும் கட்டுரை எழுதியனுப்பலாம். ஆனால் அவர்கள் முன் எழுதிய பொருளைவிட்டு மற்றொரு பொருளைப்பற்றி எழுதியனுப்புதல் வேண்டும்.

சமாச்சாரக் குறிப்புகள்.

இங்கிலாந்து தேசத்தில் மகாஜன ராஜரீகசங்க (பார்லிமெண்ட்)த்தில் தொழிற்கட்சியாரின் பிரதிநிதிகளில் ஒருவராகி அங்கத்தினராயிருந்து பொது ஜனங்களுடைய ஸ்வதந்திர உரிமைகளுக்காக மிகவும் தைர்யமாகப் பாடுபட்டு வந்த கேர்ஹார்டி என்பவர் சென்ற செப்டம்பர் மாதம் 26-ம் தேதி காலம் சென்றாரென்று கேள்விப்பட்டு நாம் அளவில்லா விசனமடைகின்றோம். இவர் ஸ்காட்லாண்ட் தேசத்தில் பிறந்தவர்; தமது இருபத்து நான்காவது வயது வரையில் சுரங்கங்களில் வேலைசெய்து வந்தார். 1892-வது வருஷத்தில் இவர் சாதாரண ஜனமகாசபையில் ஒரு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1907-வது வருஷத்தில் இவர் இந்தியாவுக்கு வந்து இங்குள்ள பொது ஜனங்களின் நிலைமையையும் நோக்கத்தையும் கவனித்துச் சென்றார். இவர் இந்தியர்களின்மீது அநுதாபம் மிகுந்தவர். இவர் நடத்திவந்த 'தொழிற்றலைவர்' (லேபர்லீடர்) என்னும் பத்திரிகையின் காரியஸ்தலம் சமீபத்தில் அரசாங்கத்தாரால் சந்தேகிக்கப்பட்டுச் சோதனை போடப்பட்டது. இவர் சமாதானக் கட்சியில் சேர்ந்து, இப்பொழுது நடக்கும் யுத்தத்திற்கு அநுகூலமாயிராத

நோக்கத்தைக் கொண்டிருந்தமையால் ஆங்கிலேயப் பொது ஜனங்களிற் பெரும்பான்மையோராலும் அருவருக்கப்பட்டு வந்தார். இவருடைய மாணத்தினுல் உலகத்திற்கு ஓர் பெருநஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

* * *

தில்லையாடியில் நமது நண்பர் ஸ்ரீமான் டி. ஏ. சுப்பிரமணியாச்சாரியவர்களின் சகோதரராகிய ஸ்ரீமான் டி. ஏ. ராமசாமியாச்சாரியவர்கள் ஜப்பானுக்குச் சென்று அந்த தேசத்தின் ராஜதானி நகரமாகிய டோக்கியோவில் சென்ற மூன்று வருடகாலமாகப் பின்னல் நெசவுத்தொழிலைக் கற்றுக்கொண்டு வந்தார். இவர் இப்பொழுது இத்தொழிற் பரீட்சையில் மிகுந்த கௌரதையுடன் தேறியிருக்கிறுரென்று கேள்விப்பட்டு நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம். இந்தத் தொழிலைப்பற்றியுள்ள அநேக விஷயங்களுளொன்றில் பிரத்தியேகமாகத் தேர்ச்சிபெற விரும்பி இவர் இன்னும் ஒருவருடத்திற்கு அந்த தேசத்திலேயே தங்குவாரென்றும் அநேகமாக அடுத்தவருஷ முடிவுக்குள் இந்தியாவுக்குத் திரும்புவாரென்று அறிகிறோம்.

* * *

"குதிரை தூக்கிப்போட்டதுமன்றியில் மேலேறியும் மிதித்ததாம்" என்ற பழமொழிக்கிணங்க, "சுதேசமித்திரன்" பத்திரிகை கணக்கில்லாது ஆங்கிலச் சொற்களை அப்படியப்படியே பிரயோகிப்பது மன்றியில், அப்படிப் பிரயோகிப்பது நியாயமேயென்றும் ஸ்தாபிக்க ஆரம்பித்திருக்கின்றது; நம்மிடத்திலும் பலகுற்றம் குறைகளைக்கண்டு எழுதியிருக்கின்றது. இதற்கு மறுமொழி யெழுதிப் பிரசுரிப்பதற்கு இப்பத்திரிகையில் இடம் போதாதாகையால், நமது அடுத்த பத்திரிகையில் சுதேசமித்திரனுடைய நியாயங்களைக் கவனிப்போம்.

* * *